பக்கங்கள் 19+6

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 25 திங்கட்கிழமை 08.07.2024 அதிர்வு 343

# யானை தாக்கி இளைஞர் பலி!

(ராமு தனராஜா)

காட்டு யானை தாக்கியதில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் இன்று அதிகாலை 12.30 மணியளவில் 04

# 200 தொழிற்சங்கங்களின் போராட்டத்தால் நாடளாவிய ரீதியில் அரச சேவைகள் பாதிப்பு

அடிப்படை சம்பளத்தை 20 ஆயிரம் ரூபாவால் அதிகரித்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்னிறுத்தி அரச சேவையைச் சேர்ந்த 200 தொழிற்சங்கங்கள் இன்று ஆரம்பித்துள்ள தொழிற்சங்க நடவடிக்கை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று அரச மற்றும் மாகாண அரச சேவைகள் தொழிற்சங்கங்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. 04

# சாவகச்சேரியில் சர்ச்சை தற்காலிகமாகத் தணிவு





## மக்கள் நாயகன் டாக்டர் அர்ச்சுனா கொழும்பு செல்வதால் வைத்தியசாலைப் பொறுப்பை பணிப்பாளர் கைப்பற்றினார்

(து.சுபேசன்)

கடந்த சில நாள்களாக தமிழ் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்த சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அர்ச்சுனா இன்று திங்கட்கிழமை மதியம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையை விட்டு இரு நாள்கள் தற்காலிகமாக வெளியேறி கொழும்பிற்குச் சென்றுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விவகாரம் கடந்த சில நாள்களாகப் பெரும் பூதாகரமாக வெடித்திருந்தது. 04

# திட்டமிட்டபடி ஜனாதிபதித் தேர்தல் இனி அதைத் தடுக்க வழியேயில்லை

## இன்று உயர்நீதிமன்றின் உத்தரவால் உறுதிநிலை மனுவைக் காடாசியது ஐந்து நீதியரசர்கள் ஆயம்

கொழும்பு,ஜுலை08

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் தெளிவான நிலைப்பாடு ஒன்று வரும் வரையில் ஜனாதிபதித் தேர்தலை அறிவிப்பதைத் தடுக்கும் வகையில் உத்தரவு ஒன்றைப்பிறப்பிக்கக்கோரிதாக்கல்செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை பிரதம நீதியரசர் உட்பட ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் விசாரணைக்கு ஏற்காமல் தூக்கிக் கடாசியது. 04

# அத்துருகிரியவில் துப்பாக்கிச்சூடு! பிரபல வர்த்தகர் உட்பட 2 பேர் பலி!!





## சிங்களப் பாடகி சுஜீவா உப்பட நால்வர் காயம்

கொழும்பு மாவட்டத்தின் புறநகர் பகுதியான அத்துருகிரியவில் இன்று நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் இருவர் பலியானமையோடு நால்வர் காயமடைந்துள்ளனர்.

சுரேந்திர வசந்த என அழைக்கப்படும் பிரபல வர்த்தகர் உட்பட இருவர் பலியாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த நால்வரில் பிரபல சிங்களப் பாடகி கே.சுஜீவாவும் அடங்குகின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துருகிரிய நகரில் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு 04

# இன்று சாவகச்சேரியில் திரண்ட மக்கள் வெள்ளம்

















# இன்று சாவகச்சேரியில் திரண்ட மக்கள் வெள்ளம்













# மட்டக்களப்பு செட்டிபாளையம் கடற்கரையில் அடையாளம் தெரியாத பெண்ணின் சடலம் மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு செட்டிபாளையம் கடற்கரையில் அடையாளம் தெரியாத பெண் ஒருவரின் சடலம் இன்று திங்கட்கிழமை மீட்டகப் பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தக் கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளதாக பொதுமக்கள் தகவல் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டனர். அது அடையாளம் காணப்படவில்லை எனவும், நீதிமன்ற அனுமதியை பெற்று சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சாவகச்சேரியில்...

இந்நிலையில் ஒருபுறம் மக்கள் போராட்டம் இடம்பெற, மறுபுறம் பதில் வைத்திய அத்தியட்சகரை வெளியேற்றுவதற்கான காய் நகர்தல்கள் இடம்பெற்றிருந்தன.

இந் நிலையில் பதில் வைத்திய அத்தியட்சகரை பேச்சுவார்த்தைக்காக கொழும்பிற்கு அழைத்திருந்த நிலையில் இருநாள் விடுமுறையில் கொழும்பிற்கு சென்று மீண்டும் வருவேன் என மக்களிடம் உறுதியளித்து விட்டு இன்று மதியம் அவர் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இது தொடர்பாக பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா கருத்துத் தெரிவிக்கையில் –

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்னை வைத்தியசாலையை விட்டு வெளியேறுமாறே கூறியுள்ளார். ஆனால் இவ் விடயம் தொடர்பாக நாடாளுமன்றில் பேசி முடிவெடுக்கப்படவுள்ள நிலையிலும், என்னோடு பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தும் முகமாகவுமே என்னை கொழும்பிற்கு அழைத்துள்ளனர்.

நான் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராகவே கொழும்பு சென்று வரவுள்ளேன்.

ஆனால் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தானே வைத்திய அத்தியட்சகர் எனத் தெரிவிக்கின்றார்.அந்த முடிவை நீதிமன்றம் தான் எடுக்க வேண்டும்.

தற்போதும் சட்டப்படி நானே பதில் வைத்திய அத்தியட்சகர். எனவே மக்கள் பதற்றமடையவோ,குழப்பமடையவோ தேவையில்லை. மக்கள் என் மீது வைத்த அன்புக்கு நன்றி.மீண்டும் வருவேன். என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

வைத்தியர் அர்ச்சுனாவின் உறுதிமொழியை ஏற்ற பொதுமக்கள் வைத்தியரை வழியனுப்பியதுடன் போராட்டத்தை நிறைவுக்கும் கொண்டு வந்திருந்தனர்.

அதற்கு முன்னர், நேற்று இரவிலிருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் ஏ9 வீதியை ஒட்டியிருந்த சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்னால் ஆவேசமாகக் கூடிநின்று, பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அர்ச்சுனாவை வெளியேற்றுவதற்கு எதிராகக் கொதித்துக் கொண்டிருந்தனர். இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவியது

### யானை தாக்கி...

மஹியங்கனையில் இடம்பெற்றுள்ளது.

மஹியங்கனை, பெலிகல்ல பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்று மஹியங்கனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டு யானை தாக்கியதில் படுகாயமடைந்த மேற்படி இளைஞரை மஹியங்கனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது இடைநடுவில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

சடலம் மஹியங்கனை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மஹியங்கனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### 200 தொழிற்சங்கங்களின்...

அந்த ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சந்–தன சூரியாராச்சி இன்று பிற்பகல் இதனை ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்க நடவடிக்கை நாளையும் தொடரும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக நாடளாவிய ரீதியில் அரச துறையின் பல சேவைகள் ஸ்தம்பிதமாகியுள்ளன.

### திட்டமிட்டபடி...

இது,அர்த்தமற்ற அற்ப மனு (Frivolous Petition) என்று குறிப்பிட்டுத் தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றம், வழக்கின் செலவாக அரசுக்கு ஒரு லட்சம் ரூபா செலுத்தும்படி மனுதாரரைப் பணித்திருக்கின்றது.

மேலும் ஒரு மாதத்திற்குள் நீதிமன்ற கட்டணத்தை செலுத்த மனுதாரருக்கு அது உத்தரவிடப்பட்டுள்ளது.

தற்போதைய அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள் என்பது தெளிவாக உள்ளதாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார். சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையாகி பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்க டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

இந்நிலையில், இந்த மனுவை விசாரணைக்கு ஏற்காமல் தள்ளுபடி செய்யுமாறு இடையிட்டு எதிர்மனுதாரர்களுக்காக முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணிகள் ருமேஷ் டி சில்வா, கனகேஸ்வரன், சாலிய பீரிஸ், சுமந்திரன் என்று பல சிரேஷ்ட சட்டத்தரணிகள் வாதங்களை முன்வைத்தமையை அடுத்து, மனுவை விசாரணைக்கு ஏற்காமல் தள்ளுபடி செய்திருக்கின்றது உயர் நீதிமன்றம்.

பிரபல தொழிலதிபர், சி.டி. லெனாவா கடந்த புதன்கிழமை இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ, பிரிதி பத்மன் சூரசேன மற்றும் எஸ். துரைராஜா ஆகியோர் அடங்கிய ஐந்து பேர் கொண்ட உயர் நீதிமன்ற ஆயமே இந்த உத்தரவை இன்று வழங்கியது.

தேர்தல்கள் ஆணைக்குழு, அதன் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் மற்றும் சட்டமா அதிபர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டனர்.

உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பினால், அடுத்த 8 நாள்களின் பின்னர் அடுத்த ஜானாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தி முன்னெடுப்பதற்கான சகல தடைகளும் பெரும்பாலும் நீங்கிவிட்டன என்று சட்டவட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

### அத்துருகிரியவில்...

அருகில் உள்ள அழகு நிலையம் ஒன்றின் திறப்பு விழாவில் அவர் கலந்துகொண்டபோதே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் ஹோமாகம வைத்தியசாலை மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு விசேட அழைப்பு விடுத்துள்ள மலேசியா நாடாளுமன்றம்

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானை, மலேசியா நாடாளுமன்றத்துக்கு டட்டுக் ஸ்ரீ சரவணன் முருகன் அழைப்பு விடுத்துள்ளார்.

மூவின மக்கள் வாழும் நாடான இலங்கையில், மூவின மக்களுக்கும் பாரபட்சம் இன்றி சிறந்த தலைமைத் துவத்தை வழங்கும் தலைவர் என்ற ரீதியில் ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு இந்த விசேட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மலேசியா பல்லின மக்கள் வாழும் ஒரு நாடு. அங்குள்ள இந்தியா வம்சாவளி தமிழர்களுடன், மூவின மக்களும் ஒன்றாக வாழ, தான் முன்னெடுத்த வழிமுறைகள் குறித்தும், தனது தலைமைத்துவ பண்புகள் மற்றும் தொடர் வேலைத் திட்டம் குறித்து கலந்துரையாட கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானுக்கு விசேட அழைப்பு விடுக்கப்பட்டது.

இன்று செந்தில் தொண்டமான் மலேசியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.





DATUK SERI M.SARAVANAN
Member of Parliament (Tapah)

1st July 2024

Excellency M. Senthil Thondaman
Governor
Eastern Province, Sri Lanka

**Invitation for Your Excellency's Attendance to Share Your Leadership Experience with the Malaysian Indian Community and Political Leaders (7th July -12th July 2024).**

Greetings Your Excellency. With great honour, we extend an invitation to address various gatherings at the state and national levels in Malaysia, focusing on the Malaysian Indian community.

It is a privilege to have Your Excellency, with such a vast background of experience and exposure, share your extensive knowledge in this area. Your remarkable leadership in achieving swift socio-economic recovery is truly inspiring, and we believe that hearing Your Excellency's insights on this topic would be highly beneficial for the Malaysian Indian community and political leaders.

Furthermore, Your Excellency's background as a leader from a multiracial and multi-ethnic country like Sri Lanka is particularly impactful. Given Malaysia's rich diversity, we are confident that your experiences and perspectives would be of great value to us. It would be a remarkable pleasure to have Your Excellency address the Malaysian Indian community as well as political leaders.

Thank you in advance.

Yours truly,

**Datuk Seri. Dr. M. Saravanan**
**Deputy President Malaysia Indian Congress**
**Member of Parliament, Malaysia**



# கல்வி மேம்பாட்டுப் பேரவையின் டிப்ளோமாதாரிகளுக்குச் சான்றிதழ்

(அஷ்ரப் ஏ சமத்)

கல்வி மேம்பாட்டுப் பேரவையின் 2024 ஆம் ஆண்டுக்கான டிப்ளோமா பயிற்சி நெறியை வெற்றிகரமாக முடித்தவர்களது சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அலுவலக ரீதியாகப் பேரவையின் பணிப்பாளர் மருதூர் ஏ ஹசன் தலைமையில் கொழும்பு கலதாரி ஹோட்டலில் இரு அமர்வுகளாக நடைபெற்றது.

இந்த நிகழ்வின் காலை அமர்வின் போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் மருதூர் ஹஸன் எழுதிய முன்பள்ளி பாடசாலை கைநூல் அதிதிகளுக்கு வழங்கப்பட்டன.

நிகழ்வுக்குக் கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், கொழும்பு ஐ.தே.கட்சியின் அமைப்பாளருமான சபீக் ரஜாப்டீன் பிரதம அதிதியாகவும் முன்னாள் கல்வி அதிகாரியும், சப்ரகமுவ பல்கலைக்கழக விரிவுரையாளரும் சியாத் ஹமீத் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டு சான்றிதழ்களையும் புலமைப்பரிசில்களையும் வழங்கி வைத்தனர்.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நீதி பிழைத்தது!

நடக்க வேண்டிய ஜனாதிபதித் தேர்தலுக்கு நீதித்துறை மூலம் ஆப்பு வைக்கப்படலாம் என்ற சந்தேகத்தை உயர் நீதிமன்றம் இன்று எடுத்த எடுப்பிலேயே தவிடு பொடியாக்கி விட்டது.

ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டபடி செப்டம்பர் 17 திகதிக்கும் அக்டோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் ஒரு தினத்தில் நடத்துவதற்கான அனைத்து தடைகளும் அடியோடு நீங்கி விட்டன என்பதுதான் இப்போதைய நிலைமை.

இந்தத் தேர்தலை தடுப்பதற்கான எல்லா மார்க்கங்களும் மூடப்பட்டு விட்டன என்பது இப்போது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

அதாவது இன்னும் 70 நாள்கள் முதல் 100 நாள்களுக்குள் - பத்து தொடக்கம் பதினான்கு வாரங்களுக்குள் - ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் என்பதுதான் தவிர்க்க முடியாத கட்டாய நிலைமை.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை அடுத்த ஒன்பது நாள்களில் பின்னர் தேர்தல் ஆணையம் விடுக்கும். அதன் பின்னர் தேர்தல்கள் தொடர்பான சட்ட விதிகள், ஒழுங்குகள் நடைமுறைக்கு வந்து விடும். தேர்தல் ஆணையத்தின் நியாயாதிக்கம் எல்லா விடயங்களிலும் கண்காணிப்பாக அமையும்.

தேர்தல் நடவடிக்கை ஒன்றை தேர்தல் ஆணையம் ஆரம்பித்த பின்னர் பெரும்பாலும் நீதித்துறை கூட அதன் விடயங்களில் தலையிடுவதில்லை.

தேர்தல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்த பின்னர், தேர்தல் ஆணையம் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும்; செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும்.

ஆக, அண்மைக்காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் நிதி அமைச்சர் என்ற முறையில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான நிதியை அனுமதிக்காமல் வெட்டி, உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பான தேர்தல் ஆணையத்தின் சுயாதீனத்தில் தலையிட்டு, கடந்த ஒன்றரை ஆண்டுகளாக அதனை நடத்த விடாமல் தடுத்து, தமது ஜனநாயக விரோதப் போக்கை உறுதிப்படுத்திக் கொண்டார். எனினும் விடயம் இத்துடன் முடிந்து விடப் போவதில்லை. இந்தப் பழி - பாவம் - சட்ட ரீதியான பொறுப்பு - ஜனாதிபதிப் பதவியை விட்டு அவர் இறங்கியதும் வந்து அவரைச் சூழும் என்பதுதான் பலரினதும் எதிர்பார்ப்பு. நம்பிக்கை.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பை, தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பான சர்ச்சை தீர்க்கப்படும் வரை ஒத்திவைக்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மனுவை, உயர்நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் உட்பட்ட ஐந்து நீதியரசர்கள் கொண்ட ஆயம் முதல் நாள் பரிசீலனையின் போதே விசாரணைக்கு ஏற்காமல் நிராகரித்து தள்ளுபடி செய்யும் முடிவை ஏகமனதாக எடுத்துவிட்டது.

இந்த மனுவைப் பரிசீலனைக்கும் விசாரணைக்கும் எடுப்பதற்கு அதில் சட்ட நியாயம் ஏதுமில்லை என்பதை சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்க டி சில்வா மற்றும் இடையீட்டு எதிர்மனுதாரர்களுக்காக முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணிகள் ருமேஷ் டி சில்வா, கனகேஸ்வரன், சாலிய பீரிஸ், சுமந்திரன் என்று பல சிரேஷ்ட சட்டத்தரணிகள் வாதங்களை முன்வைத்தமையை அடுத்து, மனுவை விசாரணைக்கு ஏற்காமல் தள்ளுபடி செய்திருக்கின்றது உயர் நீதிமன்றம்.

இது, அர்த்தமற்ற அற்ப மனு (*Frivolous Petition*) என்று குறிப்பிட்டுத் தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றம், வழக்கின் செலவாக அரசுக்கு ஒரு லட்சம் ரூபா செலுத்தும்படி மனுதாரரைப் பணித்திருக்கின்றது.

அதுமட்டுமல்ல இதே போன்ற அடிப்படையில் 2019 இல் ஒரு மனுவை இதே மனுதாரர் தாக்கல் செய்திருப்பதும், அதுவும் உயர் நீதிமன்றத்தினால் விசாரணைக்கு ஏற்கப்படாமல் அப்போது தள்ளுபடி செய்யப்பட்டு இருப்பதும், அதை இந்த விண்ணப்பத்தில் காட்டாமல் மனுதாரர் மறைத்திருக்கின்றமையும் கூட மனு மீதான இன்றைய பரிசீலனைகளின் போது வெளிப்பட்டிருக்கின்றன.

விசாரணைக்கு முகாந்தரமே - அடிப்படையே - விடயங்களே - இல்லாத ஓர் அற்ப மனுவை முன்னிறுத்தி நாட்டின் தேசிய பிரச்சனையின் ஓர் அம்சமான ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு எடுத்த முயற்சி மிகப் பாரதூரமானதாகும்.

அது விடயத்தில் மக்கள் மனதில் சந்தேகம் நீடிக்காத வகையில் விரைந்து விவகாரத்தை முடித்துக் கொண்டு விட்ட நீதித்துறையினரும், அதற்காக வாதாடிய சட்டத்துறையினரும் பாராட்டுக்குரியவர்கள்.



## பெருந்தோட்டத் தொழிலாளர்கள்

# நாளாந்த சம்பளமாக 1,700 ரூபாவை வழங்குமாறு கோரி இன்று போராட்டம்!

(ஆ.ரமேஸ்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபாவை வழங்க கோரி அக்கரப்பத்தனை பெருந்தோட்ட முகாமைத்துவ கம்பனிக்கு அழுத்தம் கொடுத்து அக்கரப்பத்தனை பிரதேச தோட்டங்களில் ஒரு மணிநேர அடையாள போராட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் இன்று திங்கட்கிழமை காலை ஈடுப்பட்டனர்.

1700 ரூபாய் சம்பள உயர்வு தொடர்பாக அரசு வெளியிட்டிருந்த வர்த்தமானிக்கு எதிராக இடைக்கால தடை உத்தரவை வழங்கக் கோரி பெருந்தோட்ட நிறுவனங்கள் நீதிமன்றம் சென்று இடைக்கால தடை உத்தரவையும் பெற்றுள்ளன.

இந்த நிலையில் இந்த மாதம் சம்பளத்தில் வழங்கப்படும் என எதிர்பார்த்திருந்த 1700 ரூபா சம்பளம் வழங்கப்படாததால் தொழிலாளர்கள் ஏமாற்றத்துக்கு ஆளாகியுள்ளனர்.

அதேநேரத்தில் 1700 ரூபா சம்பளத்தை பெற்றே தீருவோம். மனம் தர வேண்டாம் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் ஊடகங்கள் ஊடாக விசேட அறிவித்தலை இன்று (08) காலை விடுத்திருந்தார்.

இதையடுத்துத் தோட்டப் பகுதிகளில் தொழிலாளர்கள் கம்பனிகளுக்கு எதிராக கோஷம் எழுப்பி ஒரு மணி நேரம் அடையாள பணிப் பகிஷ்கரிப்பில் முதற்கட்டமாக ஈடுப்பட்டுப் பின்னர் வழமையான தொழிலுக்கு சென்றனர்.

அதேநேரம் அக்கரப்பத்தனை சென்ரெகுலாஸ் தோட்டத்தில் தொழிலாளர்கள் மழையையும் எதிர்பாராது பதாதைகளை ஏந்தி பணிப் புறக்கணிப்பில் ஈடுப்பட்டனர்.





# இளைஞர் சமூகத்தை நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்கச் செய்யும் நோக்குடன் வலுவூட்டல்!

நாடளாவிய ரீதியில் உள்ள இளைஞர் சமூகத்தை மீண்டும் உற்சாகப் படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கீழ்மட்டத்திலுள்ள இளைஞர், யுவதிகளின் வளர்ச்சிக்காக அணி திரட்டுவதுதான் இதன் நோக்கம்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் கோரிக்கைக்கு அமைய கம்பஹா மாவட்டத்தில் இருந்து இதனை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இம்மாத இறுதிக்குள் இந்த வேலைத் திட்டத்தை கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்ட செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (05) இடம் பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக தேசிய இளைஞர் சேவை மன்றம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நாட்டின் மக்கள் தொகை தற்போது 21.41 மில்லியனாக உள்ளது. அந்த எண்ணிக்கையில் 23.08 சதவீதம் இளைஞர் சமுதாயமாகும். இது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்காகும். இவர்களில், வேலையின்மையால் அவதிப்படும் இளைஞர்கள், பாடசாலைக் கல்வியைத் தவறவிட்டவர்கள், படிப்பை கைவிட்டவர்கள், உயர்கல்வி படிக்காதவர்கள், தேவையான நுழைவுத் தேர்வுகளுக்கான தகுதிகள் இல்லாதவர்கள் ஆகியோர் ஆண்டுதோறும் வேலையில் சேர்க்கப்படுகிறார்கள். அந்தக் குழுவினரின் கோரிக்கைக்கு அமைய இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படுகிறது என்று தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பணிப்பாளர் ரசிக தெலபொல தெரிவித்தார்.

அதற்குத் தேவையான அனைத்து வழிகாட்டல்களையும் தேசிய இளைஞர் சேவை மன்றம் செய்கிறது. கம்பஹா மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மினுவாங்கொடை பிரதேச செயலகத்தின் 121 கிராம சேவைப் பகுதிகளை மையப்படுத்தி அதன் முன்னோடி வேலைத் திட்டத்தை ஆரம்பிக்குமாறு அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.

ஒரு கிராம உத்தியோகபூர்வ பிரிவில் இருந்து 15-29 வயதுக்கு உட்பட்ட 8-12 இளைஞர்கள், யுவதிகளைக் கொண்ட குழு முதல் திட்டத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

பிரதேச செயலாளர்கள் மற்றும் இளைஞர் சேவை உத்தியோகத்தர்களுடன் இணைந்து தேவையான இளைஞர்களை தெரிவு செய்யுமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களை தேசிய மற்றும் உலகளாவிய தொழிலாளர் சந்தையை சமாளிக்கக் கூடிய நல்ல ஆளுமை கொண்ட ஒரு அறிவார்ந்த இளைஞர்களை உருவாக்க வழிகாட்டுதல் திட்டங்கள் மற்றும் குடியுருப்பு பயிற்சி திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

இந்தக் கலந்துரையாடலில் இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை உணர்ந்து பல்வேறு துறைகளில் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க,

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணப்படி தேசிய இளைஞர் சேவை மன்றம் ஸ்தாபிக்கப்பட்டது. அன்றைய தினம் ஆரம்பிக்கப்பட்ட இளைஞர் சேவை மன்றத்தின் ஊடாக இளைஞர் கழகங்களின் ஊடாக இளைஞர்களுக்கு பல பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அப்போது நாங்கள் எதிர்கட்சியில் இருந்த போதும் இளைஞர் சேவை மன்றத்தின் மூலம் பாரிய அளவிலான பணிகளை நிறைவேற்ற முடிந்தது.

இளைஞர்களின் ஆற்றலை வீதியில் இறக்காமல் நாட்டின் பொருளாதாரத்தில் பயன்படுத்த முடிந்தது. அப்போது அரசியல் இருக்கவில்லை. நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் யுத்த காலத்தில் இளைஞர் சமூகங்களை ஒன்றிணைத்து போர் வீரர்களுக்கு வீடுகளை வழங்கினோம். தொழில்முனைவோரை உருவாக்குவதற்கான திட்டங்களைச் செயல்படுத்தினோம்.

துரதிஷ்டவசமாக கடந்த காலங்களில் இளைஞர்களை ஒன்று திரட்டி நடைமுறைப்படுத்திய திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியவில்லை. இன்றைய இளைஞர்கள் சில அரசியல் வாதிகளின் கைக்கூலிகளாக மாறிவிட்டனர். அதைத் தடுத்து நிறுத்த இளைஞர் சமூக இயக்கம் புத்துயிர் பெற வேண்டும். அதனால் தான் இந்த திட்டம் செயல் படுத்தப்படுகிறது.- என்றார்.

இந்த நிகழ்வில் கம்பஹா மாவட்ட செயலாளர் லலிந்த கமகே, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர் பசிது குணரத்ன மற்றும் பிரதேச செயலாளர்கள் குழுவினர் கலந்துகொண்டனர்.



# மொட்டுவில் அங்கத்துவம் பெற ரணில் ஒருபோதும் தயாரில்லை

## ஐ.தே.க. உறுப்பினர்கள் திட்டவட்டம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் அங்கத்துவத்தைப் பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் தயாரில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், தேசிய வேட்பாளராகப் பொதுச் சின்னத்திலேயே ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார் எனவும், மொட்டு சின்னத்தில் போட்டியிடத் தயாரில்லை எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் இணைந்து, அங்கத்துவத்தைப் பெற்றால் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் பரிசீலிக்கலாம் என்று மொட்டுக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்திருந்தார்.

அதேபோல் மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் கொள்கைகளைச் செயற்படுத்தக்கூடியவராகவும் ஜனாதிபதி வேட்பாளர் இருக்க வேண்டும் என்று மொட்டுக் கட்சி தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மொட்டுக் கட்சியின் நிபந்தனைகளை நிராகரிக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அறிவிப்பு விடுத்துள்ளனர்.

# சஜித் தலைமையிலான ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சை ஏற்கத் தயார்

## முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க அறிவிப்பு



சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சுப் பதவி வழங்கப்படுமானால் அதனை ஏற்றுச் செயற்படுவதற்குத் தயார் என்று முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க ஊடகங்களிடம் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து சரத் பொன்சேகா வெளியேறவுள்ளதால், பாதுகாப்பு அமைச்சுப் பதவி தங்களுக்கு வழங்கப்படுமா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"நாட்டுக்குத் தேவையான விடயங்களைச் செய்யவே ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளோம். ஸ்தீரமானதொரு அரசை ஸ்தாபிப்பதே எனது அணியின் நோக்கம்.

நான் பதவிகளை ஏற்பதற்கோ அல்லது தேர்தலில் போட்டியிடவோ தனிப்பட்ட ரீதியில் எதிர்பார்க்கவில்லை. எனக்கு உடலில் இன்னும் பலம் உள்ளது. எனவே, நாட்டுக்கு எதையேனும் செய்வதே எமது எதிர்பார்ப்பாகும்.

பாதுகாப்பு அமைச்சு தொடர்பில் சஜித் பிரேமதாஸவுடன் பேச்சு நடத்தவில்லை. எனினும், குறித்த பதவியை நான் ஏற்க வேண்டும் எனக் கட்சித் தலைவர், கட்சி மற்றும் நாட்டு மக்கள் கருதினால் அதனை ஏற்றுச் செயற்படுவதற்குரிய வலிமை உள்ளது.

சரத் பொன்சேகாவின் நூல் வெளியீட்டு விழாவில் நானும் பங்கேற்றிருந்தேன்." - என்றார்.





# நிலாவெளி கடலில் மூழ்கிய 6 பேர் மீட்பு!

திருகோணமலை பிரதேசத்தில் நிலாவெளி கடலில் மூழ்கி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த 6 பேர் திருகோணமலை பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

கண்டி, பிலிமதலாவ பிரதேசத்தைச் சேர்ந்த 16 முதல் 28 வயதுக்குட்பட்ட அறுவரே காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் நிலாவெளி கடலில் நீராடிக்கொண்டிருக்கும்போது திடீரென நீரில் மூழ்கியுள்ள நிலையில், அங்கு கடமையில் இருந்த பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர் இவர்களைக் காப்பாற்றியுள்ளனர்.

காப்பற்றப்பட்டவர்களில் ஒருவர் சிகிச்சைக்காக நிலாவெளி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பாடசாலைகள் நாளை வழமைபோல் இயங்கும்

## கல்வி அமைச்சு அறிக்கை



இலங்கையில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளிலும் நாளை வழமை போல் கல்வி நடவடிக்கை இடம்பெறும் என்று கல்வி அமைச்சு விசேட அறிக்கையொன்றின் ஊடாக இன்று அறிவித்துள்ளது.

அதிபர், ஆசிரியர்கள் நாளை சுகவீன விடுமுறையில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ள நிலையிலேயே கல்வி அமைச்சு இவ்வாறு அறிவித்துள்ளது.

# சஜித் அணியில் இருந்து இருவர் விரைவில் வெளியேறுகின்றனர்

## ஹர்சன ராஜகருண எம்.பி. தகவல்

ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் கட்சியிலிருந்து வெளியேறவுள்ளனர் என்று தெரிவித்துள்ள கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருண, அவர்கள் டொலர்களில் வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹா மற்றும் களுத்துறையைச் சேர்ந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியிலிருந்து விரைவில்



வெளியேறவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் விபசாரம் செய்யும் இவர்கள் டொலர்கள் மூலம் கிடைத்த வெகுமதிகளுக்கு விலைபோயுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

"நாங்கள் ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்களையே இழக்கப்போகின்றோம். ஆனால், தங்கள் பதவிகளைத் துறந்துவிட்டு எதிர்க்கட்சியில் இணைவதற்குப் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாராகவுள்ளனர்." – என்றும் ஹர்சன ராஜகருண எம்.பி. மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கம்பனிகளுக்கு எதிராகத் தொழிற்சங்க நடவடிக்கை இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் அறிவிப்பு



**(பொகவந்தலாவ நிருபர் எஸ் சதீஸ்)**

கம்பனிகளுக்கு எதிராக இன்று (08) திங்கட்கிழமை தொடக்கம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்க போராட்ட நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்று நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் விசேட அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்

1700 ரூபா வர்த்தமானி வெளியிடும் போது சில தொழிற்சங்கங்கள் நாங்களும் பெற்றுக் கொடுத்தோம் என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். அப்படி பெயர்தான் போட வேண்டும் என்றால் எனக்கு அது பற்றிப் பிரச்சினை இல்லை. தயவு செய்து பெயர் போட்டுக் கொள்ளலாம். ஆனால், மக்களுக்குக் கட்டாயம் ஒற்றுமையாக, உறுதுணையாக நின்றாக வேண்டும் என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சின் ஊடகப் பிரிவு ஊடாக அமைச்சர் தெரிவித்துள்ளதாவது,

இந்த 1700 ரூபா சம்பளத்தைப் பொறுத்தவரைக்கும், கட்டாயம் பெற்று கொடுப்போம் என்ற ஒரு நம்பிக்கை இருக்கின்றது. ஆனால் இதில் இருக்கும் ஒரு விஷயம் என்னவென்றால், இன்றைக்கு இளைஞர்களைப் பொறுத்த வரைக்கும் அவர்கள் பெருந்தோட்ட சமூகத்தினரை பற்றி அறியாத நபர்களாகத்தான் இருக்கிறார்கள்.

அவர்கள் நினைக்கிறார்கள் இன்றைக்கு இந்த 1700 ரூபா சம்பளமானது மக்கள் மத்தியில் ஒரு மாற்றத்தை கொண்டு வராது என்று. ஆனால், நிறைய பேருக்கு புரியாத விடயம் கொரோனாவுக்கு முன்னாள் வறுமையின் விழுக்காற்றானது பெருந்தோட்ட சமூகத்துக்கு மத்தியில் 23 சதவீதமாக இருந்தது. இன்றைக்கு அது 52 சதவீதமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இன்றைக்குக் குழந்தைகளைப் படிக்க வைக்கின்றார்கள். கிட்டத்தட்ட ஒரு லட்சம் மக்கள் இருக்கின்றார்கள் இந்த தோட்ட தொழிலை நம்பி, அந்த ஒரு லட்சம் மக்களை நம்பிக் கிட்டத்தட்ட 8 லட்சம் பேர் இருக்கிறார்கள்.

இன்றைக்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் இதனைப் பலமாக எதிர்த்து ஒரு தவறான திரையை முன்னாள் கொண்டு வந்த இருக்கின்றார்கள். அதற்கு நாங்கள் கட்டாயம் பாடம் கற்பித்துகொடுப்போம்.

மக்களுக்கு, அவர்களின் நம்பிக்கையை தளர விட வேண்டாம் என்று ஒரு கோரிக்கையை முன் வைக்கிறோம். என்னை பொறுத்த வரைக்கும் நாங்கள் சொன்னதை கட்டாயம் செய்வோம்.

இன்றைக்கு அரசாக இருக்கட்டும், தொழிற்சங்கங்களாக இருக்கட்டும் அனைத்தும் முழு முயற்சியுடன் இந்த 1700 ரூபா சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு உறுதுணையாக இருக்கின்றன. மக்களும் இதற்கு ஆதரவு அளிக்கிறார்கள்.

1700 ரூபா வர்த்தமானி வெளியிடும் போது சில தொழிற்சங்கங்கள் நாங்களும் பெற்றுக் கொடுத்தோம் என பெயர் கொடுத்திருக்கிறார்கள். அப்படி பெயர் தான் போட வேண்டும் என்றால் எனக்கு அது பற்றி பிரச்சினை இல்லை, தயவு செய்து பெயர் போட்டுக் கொள்ளலாம்.

ஆனால், மக்களுக்காகக் கட்டாயம் ஒற்றுமையாக, உறுதுணையாக நின்றாக வேண்டும். அப்பொழுதுதான் இது சாத்தியமாகும். இதில் வந்து அரசியல் விளையாடுவது ஒரு மிகப்பெரிய தவறு.

அதே நேரத்தில், இந்த நீதிமன்ற உத்தரவு வரும்போது சில தொழிற்சங்க தலைவர்களும், அரசியல் தலைவர்களும் சந்தோஷப்பட்டார்கள். இந்த மாதிரி நாங்கள் இருந்தால் நமக்குள்ளே பிரினை இருந்தால் இந்த மக்களை முன்னால் கொண்டு போக முடியாது.

என்னைப் பொறுத்த வரைக்கும், நான் இந்த நாள் கூலி சம்பள முறைமையை எதிர்க்கின்றேன். ஒரு மாற்று முறைமை தேவை. ஆனால், அந்த மாற்று முறைமை வரும் வரைக்கும் ஒரு நியாயமான சம்பளம், வாழ்வாதாரத்துக்கு ஏற்ற சம்பளம் எம் மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

என்னைப் பொறுத்த வரைக்கும் இன்றில் இருந்து மக்கள் அவர்கள் அவர்களது ஆதங்கத்தை வெளிக் காட்டுவார்கள். அதாவது ஒவ்வொரு தோட்டத்திலும் வெளிக்காட்டுவார்கள். அவர்களுக்கு ஒரு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும்., நியாயமான தீர்வு கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.– என்று தெரிவித்துள்ளார்.







# ‘வெய்துயிர்த்தல்’ கவிதை நூல் வெளியீட்டு விழா

(ரஸீன் ரஸ்மின்)



கவிஞர் பெரியமடு நிஹ்ரி எழுதிய ‘வெய்துயிர்த்தல்’ கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று (07) மாலை புத்தளம் ஐ.பி.எம். மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகரும், புரவலர் புத்தகப் பூங்கா ஸ்தாபகருமான புரவலர் ஹாஷிம் உமர் முன்னிலையில், கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சபா அதிரதன் தலைமையில் இந்த கவிதை நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வடமத்திய மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஜே.றலியுதீனும், சிறப்பு அதிதியாக தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவரும் கலந்துகொண்டனர். அத்துடன் கவிஞர்கள், கல்விமான்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகரும், புரவலர் புத்தகப் பூங்கா ஸ்தாபகருமான புரவலர் ஹாஷிம் உமர் நூலின் முதற் பிரதியை பெற்றுக்கொண்டதுடன், பிரதம அதிதி மற்றும் சிறப்பு அதிதி உள்ளிட்ட அனைவருக்கும் குறித்த கவிதை நூல் வழங்கி வைக்கப்பட்டது.

இது புரவலர் ஹாஷிம் உமர் பெற்றுக்கொள்ளும் 1269 ஆவது நூலாகும்.

வரவேற்புரையை புத்தளம் வலயக் கல்வி அலுவலகத்தின் ஆசிரிய ஆலோசகர் எஸ்.எம்.அனிபாவும், சிறப்புரையை வடமத்திய மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஜே.றலியுதீனும், வாழ்த்துரையை புத்தளம் வலயக் கல்வி அலுவலகத்தின் ஆசிரிய ஆலோசகர் ஏ.என்.எம். பி.றிஸ்மியாவும் , நயவுரையை எழுத்தாளர் பிரேம் ராஜும், ஏற்புரையை நூலாசிரியரும், கவிஞருமான பெரியமடு நிஹ்ரியும் நிகழ்த்தினர்.

அத்துடன், நூலாசிரியரும், நூலும் எனும் தலைப்பில் பல்துறை கலைஞர் ஏ.கே.இளங்கோ விஷேட உரையாற்றினார்.





# பாதுகாப்பான தோட்டக் கடமைகள் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்வு

(மஸ்கெலியா நிருபர்)

நுவரெலியா பிரதேச சபை மற்றும் தலவாக்கலை தோட்டக் கம்பனி இணைந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான தோட்டக் கடமைகள் மற்றும் விபத்து ஏற்பட்டால் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் தெளிவுபடுத்தும் விழிப்புணர்வு நிகழ்வை நடத்தினர்.

தோட்டத் துறையில் களைக்கொல்லிகள் மற்றும் பூச்சிக் கொல்லிகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் போது, வாய் மற்றும் கைக்கு முகமூடிகளை தவறாமல் அணிவது, கைகால்கள் வெளிப்படாமல் இருக்க ஆடைகளை அணிவது, உடலுக்கு தீங்கு விளைவிக்காமல் பூச்சிகள் மற்றும் களைக்கொல்லிகளை எவ்வாறு பயன்படுத்துவது போன்ற விளக்கங்கள் இதன்போது வழங்கப்பட்டன.



அத்தகைய மருந்துகளை உட்கொண்டால் மேற்கொள் எப்பட வேண்டிய அவசர முதலுதவி முறைகள் குறித்தும் தோட்டத் தொழிலாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.





# லிந்துலை பிராந்திய வைத்தியசாலை நோயாளர்களுக்குக் காலையில் சூப்!

(மஸ்கெலியா நிருபர்)

தலவாக்கலை லிந்துலை பிராந்திய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்கள், வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வரும் நோயாளர்களுக்கு காலை வேளையில் சூப் வழங்க தலவாக்கலை செங் கூம்ஸ் இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் சேவா வனிதா லங்கா பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த சமூக பாதுகாப்பு வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்குத் தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் செங் கூம்ஸ் தேயிலை தோட்ட அதிகாரிகள் தமது பங்களிப்பை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் சேவா வனிதா லங்கா பிரிவு தெரிவித்துள்ளது.



# நீர்த் தொட்டியில் வீழ்ந்து 3 வயது குழந்தை மரணம்

மூன்று வயதுடைய குழந்தையொன்று வீட்டின் நீர்த் தொட்டியில் வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளது.


மீத்தெனிய கிழக்கு பகுதியைச் சேர்ந்த குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது என்று மீத்தெனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குழந்தையின் தாய் தனது 9 வயது குழந்தையையும், உயிரிழந்த மூன்று வயது குழந்தையையும் குளிப்பாட்டுவதற்காக வீட்டுக்கு வெளியே உள்ள நீர்த் தொட்டி இருக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

பின்னர் அவரது ஒன்பது வயது குழந்தையின் உடலைக் கழுவி வீட்டினுள்ளே அழைத்துச் சென்ற தாய் மூன்று வயது குழந்தையை நீர்த் தொட்டிக்கு அருகில் இருந்தி விட்டுச் சென்றுள்ளார்.

மீண்டும் வீட்டிலிருந்து வெளியே வந்த தாய் மூன்று வயது குழந்தையைத் தேடியபோது குழந்தை நீர்த் தொட்டிக்குள் வீழ்ந்து கிடப்பதை அவதானித்துள்ளார்.

பின்னர் குழந்தை மீட்கப்பட்டு மீத்தெனிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளது என்று வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.





# பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு நடத்திய இல்ல மெய்வன்மைப் போட்டி

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, தமிழர் விளையாட்டுத் துறையின் ஆதரவில் பிரான்சு தமிழ்ச் சோலைத் தலைமைப் பணியகம், தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு ஆகியன இணைந்து நடத்திய தமிழ்ச் சோலைப் பள்ளிகளுக்கு இடையேயான இல்லமெய்வன்மைப் போட்டியை நடத்தியது.

கடந்த 2011 ஆம் ஆண்டு 450 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த விளையாட்டுப்போட்டி, இந்த முறை ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுடன் மூன்று தினங்கள் இடம் பெற்றது.

சார்சல் நகரத்தில் அமைந்துள்ள நெல்சன் மண்டேலா மத்தியி விளையாட்டு மைதானத்தில் இறுதிப் போட்டிகள் இடம்பெற்றன. சார்சல் நெல்சன் மண்டேலா மைதானப் பகுதியில் அமைந்துள்ள மாவீரர் லெப். சங்கர் நினைவுத் தூபி முன்பாக ஆரம்ப வணக்க நிகழ்வு இடம்பெற்றது.





தொடர்ந்து பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் விருந்தினர்கள் மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து பொதுச்சுடரைப் பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு நிர்வாகப் பொறுப்பாளர் நிதர்சன் ஏற்றிவைத்தார்.

பிரெஞ் கொடியை கார்ஜ் சார்சல் பிராங்கோ தமிழ்ச் சங்க பரப்புரைப் பொறுப்பாளர் செல்லையா கணபதிப் பிள்ளை ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக் கொடியை போட்டியின் துணை முகாமையாளர் பீலிக்ஸ் ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து மாவீரர் திருவுருவப்படத்துக்கான ஈகைச் சுடரை மாவீரர்களின் சகோதரர் ஏற்றிவைத்து மலர்வணக்கம் செலுத்தினார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து, தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகக் கொடியை அதன் பொறுப்பாளர் நாகயோதீஸ்வரனும் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்புக் கொடியை அதன் பொறுப்பாளர் பாலக்குமாரனும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து அணிவகுப்பு, போட்டிகள் இடம்பெற்றன. பரிசில்களும் வெற்றிக் கேடயங்களும் வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்டன.









# புத்தாண்டு காலத்தில் காஸா முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ வேண்டிப் பிரார்த்திப்போம்

## இஸ்லாமிய புது வருடத்தில் ஹரீஸ் எம்.பி. தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

பிறந்திருக்கும் இஸ்லாமிய புது வருடத்தில் உலக முஸ்லிம்கள் அனுபவித்து வரும் துன்பம் துயரங்கள் அகன்று ஒற்றுமையும் சமாதானமும் நிலவுவதற்கும் காஸா முஸ்லிங்கள் நிம்மதியாக அவர்களின் பூமியில் வாழ வழிவகுக்க எல்லாம் வல்ல அல்லாஹ்வை பிராத்திப்போம்.

இவ்வாறு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், திகாமடுல்ல மாவட்டநாடாளுமன்ற உறுப்பினருமான முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தனது முஹர்ரம் வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்த வாழ்த்து செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இஸ்லாமிய புது வருடம் ஹிஜ்ரி 1446 ஆரம்பித்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அதன் வரலாற்று முக்கியத்துவத்தை புரிந்து செயல்படுவதுடன் உலக நாடுகளில் நீதியும், நியாயமும் நிலைநாட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்துவதுடன் மேலும் நாட்டின் சகல இனத்தவர்கள் மத்தியிலும் நல்லிணக்கமும் ஒற்றுமையும் நிலவ எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கின்றேன்.



உலகவாழ் அனைத்து முஸ்லிங்களுக்கும் இதயங்கனிந்த இஸ்லாமிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.– என்றுள்ளது.




# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் புனரமைப்பு

(தில்சாத் பர்வீஸ் )

எதிர்காலம் இளைஞர்களின் கரங்களில் எனும் தொனிப்பொருளின் அடிப்படையில் சென்நெல் கிராமத்தில் முதலாம் கிராம சேவகர் பிரிவுக்கான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளர் நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று (07) ஆம் திகதி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ.எம்.ஐ.எம். மன்சூர் தலைமையில் நடைபெற்றது. இதன் போது சென்நெல் கிராமம்–01 இற்கான இளைஞர் அமைப்பாளராக சகோதர் தாஹிர் தஸ்லீம்க்கு நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை மத்திய குழுவின் செயலாளர் எம்.எஸ்.எம். அஸாறுடீன், சம்மாந்துறை இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளரும் தைக்காப் பள்ளி வட்டார வேட்பாளருமான அர்ஷத் இஸ்மாயில், சம்மாந்துறை மத்திய குழு உறுப்பினர்களான ஏ.கே.எம். சபீக், எம்.எச். முஸ்தாக் உட்பட சென்நெல் கிராமம்–01 இற்கான இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



## 2 ஆயிரத்து 888 கிலோ பீடி சுற்றும் இலைகளுடன்

# மன்னார் வங்காலை கடற்கரையில் 3 பேர் இன்று பொலிஸாரால் கைது!

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

வங்காலை கடற்கரையில் இருந்து பீடி இலைகள் கொண்ட பொதிகள் இன்று திங்கட்கிழமை (08) காலை வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்ட போது மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் அவை மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வங்காலை கடற்கரையில் வைத்து ஒரு தொகுதி பீடி இலைகள் கொண்ட பொதிகள் ஏற்றப்படுவதாக கடற்படையினர் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

இந்தத் தகவல்களுக்கு அமைவாக மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.வை.ஏ.எஸ்.சந்திர பாலவின் பணிப்புரைக்கு அமைவாக பொலிஸ் அத்தியட்சகர் ஹேரத்தின் வழி நடத்தலில் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சில்வா தலைமையில் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் வங்காலை கடற்கரைக்குச் சென்றனர். அங்கு வாகனம் ஒன்றில் பொதி செய்யப்பட்ட பீடி இலைகள் ஏற்றப்பட்ட நிலையில் மீட்டனர்.

80 மூடைகளில் பொதி செய்யப்பட்ட 2 ஆயிரத்து 888 கிலோ பீடி இலைகள் இதன்போது மீட்கப்பட்டது. மன்னார் பகுதியைச் சேர்ந்த 3 நபர்களும் கைது செய்யப்பட்டனர். மீட்கப்பட்ட பீடி இலை மூடைகள், வாகனம் என்பவற்றுடன் கைது செய்யப் பட்ட 3 சந்தேக நபர்கள் வங்காலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளனர்.

வங்காலை பொலிஸார் விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட நபர்களையும், மீட்கப்பட்ட பொருள்களையும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.













# பீகாரில் இடி மின்னலுக்கு ஒரே நாளில் 12 பேர் பலி!

## 10 நாள்களில் 40 பேரின் உயிர்கள் அதனால் காவு

பாட்னா,ஜூலை08

பீகாரில் பெய்து வரும் கனமழையை தொடர்ந்து, கடந்த 24 மணிநேரத்தில் 12 பேர் மின்னல் தாக்கி உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாநிலத்தில் பெய்த தொடர் கனமழையால் பல்வேறு ஆறுகள் மற்றும் அணைகளில் நீர்மட்டம் உயரத் தொடங்கியது. கோசி, பாகமதி, கந்தக், கம்லா மற்றும் அதார்வா உள்ளிட்ட முக்கிய ஆறுகளில் நீர் மட்டம் அபாய கட்டத்தை எட்டியது. சில பகுதிகளில் கோசி ஆறு அபாய அளவைத் தாண்டி பாய்ந்து வருகிறது.

புதிய உயிரிழப்புகளுடன், கடந்த 48 மணி நேரத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 10 நாள்களில் பீகாரின் பல்வேறு மாவட்டங்களில் 40க்கும் மேற்பட்டோர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ள பீகார் முதல்-மந்திரி நிதிஷ்குமார், உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தலா ரூ.4 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என அறிவித்துள்ளார். மேலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் போது மக்கள் விழிப்புடன் வீட்டிற்குள்ளேயே இருக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பீகார் முதல்-மந்திரி அலுவலகம் இன்று வெளியிட்ட அறிக்கையின்படி, ஜமுய் மற்றும் கைமூரில் தலா மூன்று இறப்புகளும், ரோஹ்தாசில் இரண்டு இறப்புகளும், சஹர்சா, சரண், போஜ்பூர், கோபால்கஞ்ச் ஆகிய இடங்களில் தலா ஒரு இறப்பும் பதிவாகியுள்ளது.

# ரஷ்யா, ஆஸ்திரியாவுக்கு பிரதமர் மோடி புறப்பாடு

புதுடெல்லி,ஜூலை08

பிரதமர் மோடி இன்று ரஷ்யா செல்கிறார். அங்கு அதிபர் புதினுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையில் பங்கேற்கிறார்.

இந்தியா - ரஷ்யா இடையே ஆண்டுதோறும் உச்சி மாநாடு நடக்கிறது. இதில் இரு நாட்டு தலைவர்களும் பங்கேற்று இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தி உறவுகளை வலுப்படுத்தி வருகின்றனர். அந்த வகையில் இரு நாட்டு உச்சி மாநாடு மொஸ்கோவில் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இதில் பங்கேற்க வருமாறு பிரதமர் மோடிக்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் அழைப்பு விடுத்திருந்தார்.

அதை ஏற்று பிரதமர் மோடி இன்று (திங்கட்கிழமை) ரஷ்யா செல்கிறார். இன்றும், நாளையும் அங்கே பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கும் மோடி, அதிபர் புடினுடன் பேச்சுவார்த்தையும் நடத்துகிறார்.

இதில் பிராந்திய, சர்வதேச நலன் சார்ந்த பிரச்சினைகள் முக்கிய இடம் பெறும் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியுள்ளது. மேலும்.



பாதுகாப்பு, கல்வி, முதலீடு, கலாசாரம், மக்களிடையிலான உறவுகள் உள்ளிட்ட இருதரப்பு உறவின் அனைத்து அம்சங்கள் பற்றியும் அவர்கள் விவாதிப்பார்கள் என டெல்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

போதுதான் மீண்டும் அவர் ரஷ்யா செல்கிறார். ரஷ்யா - உக்ரைன் இடையே போர் நடைபெற்று வரும் நிலையில் பிரதமர் மோடியின் இந்தஓ பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

ரஷ்யப் பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் மோடி நாளை (செவ்வாய்க்கிழமை) மத்திய ஐரோப்பிய நாடான ஆஸ்திரியா செல்கிறார். 10 ஆம் திகது வரை அங்கு இருக்கும் பிரதமர் மோடி, அந்த நாட்டு தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார். குறிப்பாக ஆஸ்திரியா அதிபர் அலெக்சாண்டர் வான்டர் பெல்லன் மற்றும் பிரதமர் கார்ல் நெகம்மருடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார். பின்னர் இருநாட்டு தொழில் அதிபர்கள் மாநாட்டில் இந்தியப்- ஆஸ்திரிய பிரதமர்கள் பங்கேற்கிறார்கள்.

இந்நிலையில் ரஷ்யா, ஆஸ்திரியாவுக்கு பயணம் மேற்கொள்ள உள்ளது தொடர்பாக பிரதமர் மோடி நெகிழ்ச்சிப் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில், “அடுத்த மூன்று நாள்களில், ரஷ்யா மற்றும் ஆஸ்திரியாவில் இருப்பேன். இந்தியா காலப்போக்கில் நட்புறவை சோதித்துள்ள இந்த நாடுகளுடன் உறவுகளை ஆழப்படுத்த இந்த பயணங்கள் ஓர் அருமையான வாய்ப்பாக இருக்கும். இந்த நாடுக ளில் வசிக்கும் இந்திய சமூகத்தினருடன் தொடர்பு கொள்வதையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்” என்று அதில் அவர் பதிவிட்டுள்ளார்.



# இந்தோனேசியாவில் நிலச்சரிவு தங்கச் சுரங்கத்தில் 11 பேர் சாவு

## மேலும் 19 பேரைக் காணவில்லை

ஜகார்தா,ஜூலை08

இந்தோனேசியாவில் கனமழை பெய்து வரும் நிலையில், சட்ட விரோதமாக இயங்கி வந்த தங்கச் சுரங்கத்தில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்று இந்தோனேசியா. கனிமவளம் நிறைந்த நாடுகளில் ஒன்றாக உள்ள இந்தோனேசியாவில் ஏராளமான சட்ட விரோத தங்க சுரங்கங்கள் இயங்கி வருகின்றன. இந்த நிலையில், அங் குள்ள சுலவேசி தீவில் கோரோண்டாலோ பகுதியில் இயங்கி வந்த சட்ட விரோத தங்க சுரங்கத்தில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக இடை விடாது பெய்த கன மழையால் இந்த நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. சுரங்கத்தில் தங்கத்தை தோண்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்கள் இந்தத் திடீர் நிலச்சரிவில் சிக்கினர். தற்போது வரை 11 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ள நிலையில் மாயமான 19 பேரை மீட்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

# பிரான்ஸில் தொங்கு நாடாளுமன்றம் அரசியல் குழப்பம் ஏற்படும் சூழ்நிலை

பாரிஸ்,ஜூலை08

பிரான்ஸில் இடதுசாரி கூட்டணி அதிக இடங்களை கைப்பற்றும் என தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தல் ஜூன் 30 மற்றும் ஜூலை 7 ஆம் திகதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. 577 உறுப்பினர்களை கொண்ட பிரான்ஸ் நாடாளுமன்ற தேர்தல் ஐரோப்பாவில் நடைபெறும் முக்கிய தேர்தலாகப் பார்க்கப்படுகிறது.

நாடாளுமன்ற தேர்தலில் அதிபர் இம்மானுவேலின் மையவாத கூட்டணி, வலதுசாரி கூட்டணியான தேசிய பேரணி கூட்டணி, இடதுசாரி கூட்டணியான நியூ பாப்புலர் பிரண்ட் கூட்டணி ஆகியன போட்டியிட்டன. இதில், மரீன் லி பென் தலைமையிலான வலதுசாரி கூட்டணி வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

இடங்களை கைப்பற்றும் என தெரியவந்துள்ளது. இடதுசாரி கூட்டணியின் முக்கிய தலைவராக ஜீன் லூக் மெலன்சொன் உள்ளார். அதே வேளை, இடதுசாரி அதிக இடங்களை



கைப்பற்றியபோதும் நாடாளுமன்றத்தில் ஆட்சியமைக்க தேவையான பெரும்பான்மை கிடைக்காது என தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்பில் தெரியவந்துள்ளது. இதன் மூலம் தொங்கு நாடாளுமன்றம் உருவாகும் சூழ்நிலை ஏற்படலாம்.

தேர்தலில் பின்னடைவை சந்தித்துள்ள ஆளும் மையவாத கூட்டணியின் பிரான்ஸ் பிரதமர் கேப்ரியல் அட்டல் தனது பதவியை ராஜினாமா செய்கிறார் என அறிவித்துள்ளார்.

தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பில் இடதுசாரி கூட்டணி அதிக இடங்களை கைப்பற்றும் என தெரிவிக்கப்பட்டபோதும், எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளதால் பிரான்சில் அரசியல் குழப்பம் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

கனடா முரசு

பக்கங்கள் - 6

திங்கட்கிழமை 08/07/2024

## கியூபெக்கில் மின் துண்டிப்பு

மொண்ட்ரீலின் தெற்கு கடற்கரையில் பஸ் ஒன்று மின்கம்பத்தில் மோதியதால் சனிக்கிழமை இரவு முதல் பல்லாயிரக்கணக்கான வீடுகளுக்கு மின்சாரம் C2▶

# வெப்பச் சூட்டில் தகிக்கப் போகும் பிரிட்டிஷ் கொலம்பியா, அல்பர்ட்டா



பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் அல்பர்ட்டாவின் பெரும் பகுதி வெப்ப எச்சரிக்கையின் கீழ் உள்ளது. இந்த வார இறுதியில் சில பகுதிகளில் வெப்பநிலை 40 பாகை செல்ஸியஸை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. C2▶



# ஸ்காபரோவில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை!




ஸ்காபரோவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் டொராண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஸ்காபரோவின் வார்டன் அவென்யூ மற்றும் எல்லெஸ்மியர் ரோடு பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு 10:18 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் குறித்து பொலிஸாருக்கு அழைப்பு வந்தது.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களால் அவதிப்பட்ட ஒரு நபரை ஷெல் எரிவாயு நிலையத்தில் அலுவலர்கள் கண்டனர் எனப் பொலிஸ் கூறுகிறது. C2▶


# நான்கு கிராமிய மருத்துவமனைகளில் அவசரகால சேவைகள் இழுத்து மூடல்

### பிரிட்டிஷ் கொலம்பியாவில் இந்த அவல நிலைமை

பிரிட்டிஷ் கொலம்பியாவில் நான்கு மருத்துவமனைகள் இந்த வார இறுதியில் குறைவான பணியாளர்களே இருப்பதால் தமது அவசரகால சேவைகளை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளன.

நிக்கோலா பள்ளத்தாக்கு, லில்லூட், கரிபூ மெமோரியல் மற்றும் தெற்கு ஒகனகன் மருத்துவமனைகளில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் குறைவாக இருப்பதால் அவசர சிகிச்சை பிரிவு சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன அல்லது தொடர்ந்து இடைநிறுத்தப்படும் எனத் தனித் தனி செய்தி வெளியீடுகளில் C2▶






# பெல்லட் துப்பாக்கியால் பூங்காவில் சுட்டுத் தள்ளிய சிறுவர்கள் கும்பல்!

## பலருக்கும் லேசான காயங்கள்

டொராண்டோவின் வூட்பைன் பூங்காவில் சனிக்கிழமை இரவு பெல்லட் துப்பாக்கிகளால் (சிறிய குண்டுமணி போன்ற உருண்டை ரக குண்டுகளைப் பயன்படுத்தும் துப்பாக்கிகளால்) சிறுவர்கள் கும்பல் தாக்கியதில் பலர் காயமடைந்தனர்.

கனடாவின் டொராண்டோவில் உள்ள வூட்பன பார்க்கில் சனிக்கிழமை இரவு, பெல்லட் துப்பாக்கிகளை வைத்திருந்த சிறுவர்கள் குழுவினால் சுடப்பட்டதில் பலர் காயமடைந்தனர்.

சுமார் 15 முதல் 16 வயதுடைய ஏழு சிறுவர்கள் கொண்ட குழு பூங்காவில் உள்ளவர்களைச் சுட்டதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து இரவு 10:30 மணியளவில், லேக் ஷோர் பவுலவார்டு கிழக்கு, கொக்ஸ்வெல் அவென்யூ மற்றும் கிழக்கு அவென்யூ பகுதியில் உள்ள பூங்காவிற்கு காவல்துறையினர் வரவழைக்கப்பட்டனர்.

இதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு லேசான காயங்களால் ஏற்பட்டு இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### நான்கு கிராமிய...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்துறை சுகாதார ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த நான்கு மருத்துவமனைகளும் மாகாணத்தின் கிராமப்புறப் பகுதிகளுக்குச் சேவை செய்கின்றன. அங்கு வசிப்பவர்கள் வேறு அவசர சிகிச்சைப் பிரிவுகளிலிருந்து பல மணிநேர பயண தூரத்தில் இருப்பவர்கள்.

பணியாளர் பற்றாக்குறை காரணமாக அவசர சேவைப் பிரிவுகள் மூடப்பட்டு இடைநிறுத்தப்படுவது பிரிட்டிஷ் கொலம்பியாவில் பல ஆண்டுகளாக நீடித்து வரும் பிரச்சினை.

“அந்த அவசர சேவை அறைகளில் சில, ‘சேவை மூடப்பட்டுள்ளது, வேறொரு இடத்தை நாடுங்கள்’ என்று கதவில் ஒரு குறிப்பை நீங்கள் எதிர்கொள்ள நேரிடலாம்” என்று பிரிட்டிஷ் கொலம்பியா கிராமிய அடநலகட்டமைப்பின் நிர்வாக இயக்குனர் பால் ஆடம்ஸ் ஒரு பேட்டியில் கூறினார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் கிராமப்புறங்களில் அவசரகால மருத்துவ முறை மற்றும் முதன்மை பராமரிப்பில் என்ன நடக்கிறது என்பது ஒரு துன்பியல் கதை”

“எங்கள் அவசரகால மருத்துவ முறை மற்றும் கிராமப்புற பி.சி.க்குள் எங்கள் முதன்மை பராமரிப்பு என்ன நடக்கிறது என்பது ஒரு சோகம்.” – என்றார் அவர்.

---

### வெப்பச் சூட்டில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுச்சூழல் கனடாவின் கூற்றுப்படி, பகல்நேர வெப்பநிலை பிரிட்டிஷ் கொலம்பியாவின் கீழ் நிலப்பகுதி மற்றும் கிழக்கு வான்கூவர் தீவில் 30 40 பாகை செல்ஸியஸாகக் குறையலாம். ஞாயிற்றுக்கிழமை கம்லூப்ஸ் போன்ற உள் சமூகங்களில் 40 பாகை செல்ஸியஸாக உயரக்கூடும். மேலும் வாரத்தின் நடுப்பகுதி வரை வெப்பமான வானிலை நீடிக்கும்.

“இந்தப் பகுதியில் உள்ள உயர் அழுத்தத்தின் ஒரு முகடு, மிக அதிக வெப்பநிலையை ஏற்படுத்தும். வியாழன் காலை வரை அது நீடிக்கும்” என்று கனடா சுற்றுச்சூழல் அமைப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

சுற்றுச்சூழல் கனடா அமைப்பின் செயல்பாட்டு வானிலை நிபுணரான கேரி லீ, மேற்குக் கடற்கரையின் பெரும் பகுதியை போர்ட்லேண்ட், ஓரே மற்றும் சியாட்டில் வரை வெப்பம் சூழ்ந்துள்ளது என்றார்.

வெப்பமான வானிலை இந்த வாரம் முழுவதும் நீடிக்கும் என்றும், குளிர்ச்சியான வானிலை பிரிட்டிஷ் கொலம்பியாவுக்கு வியாழக்கிழமை வரக்கூடும் என்றும் அவர் கூறினார்.

பகலில் 30 C முதல் 35 C வரை வெப்பநிலை எதிர்பார்க்கப்படும் அல்பர்ட்டாவின் பெரும்பகுதி முழுவதும் வெப்ப எச்சரிக்கைகள் உள்ளன. பிரிட்டிஷ் கொலம்பியாவைப் போலவே, இப்பகுதியும் ‘குறைந்தபட்சம் வாரத்தின் நடுப்பகுதி வரை’ தீவிர வெப்பத்தைக் காணலாம் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறைந்த 30 களில் வெப்பநிலையை எதிர்கொள்ளும் பங்கேற்பாளர்களை குளிர்விப்பதற்காக கல்கரி ஸ்டாம்பீட் முழுவதுமாக மிஸ்டிங் நிலையங்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

### ஸ்காபரோவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர் பிக்கரிங் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய சுலக்ஷன் செல்வசிங்கம் என அடையாளம் காணப்பட்டுள்ளார். உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட அவர், பின்னர் உயிரிழந்ததார் என அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்தில், துப்பாக்கிச் சூடு நடந்தபோது செல்வசிங்கம் அமர்ந்திருந்த எஸ்யூவி வாகனத்திலும், பெட்ரோல் பங்க் சுவரிலும் தோட்டா ஓட்டைகள் காணப்பட்டன.

சந்தேக நபர் பல தடவைகள் சுட்டுவிட்டு வாகனத்தில் அப்பகுதியிலிருந்து தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தப்பிச் சென்ற வாகனம் அல்லது சந்தேக நபர் பற்றிய விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

விசாரணை நடந்து வருகிறது.

---

### கியூபெக்கில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை.

சுமார் 10:30 மணியளவில் தொடங்கிய மின்தடையின் உச்சத்தில், சுமார் 90,000 ஹைட்ரோ-கியூபெக் வாடிக்கையாளர்கள் மின்சாரத்தை இழந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை நிலைவரப்படி, 70,000 க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு இன்னும் மின்சாரம் இல்லை. மேலும் நேற்று மாலை 5 மணி வரை மின்சாரம் மீட்டமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படவில்லை என்று ஹைட்ரோ-கியூபெக் தெரிவித்திருந்தது.



# அதிக அளவில் கடன்கள் வாங்கி கஷ்டப்படுகின்றனர் கனடியர்கள்

## சர்வதேச ரீதியிலான அறிக்கையில் தெரிவிப்பு

கனடியர்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

நுானதயசனலைளை என்ற அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கனடியர்கள் அதிக அளவில் கடன் பெற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடன் பெற்றுக் கொண்டவர்களில் அதிகமானவர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கனடியர்கள் அதிக அளவில் கடன் தொல்லையினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கனடாவில் வங்கி வட்டி வீதம் சிறிது அளவு குறைக்கப்பட்டு இருந்தாலும் இது கடன் பிரச்சனைக்கு தீர்வாக அமையவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டில் உலகில் அதிகளவு கடன் பெறுவோரை கொண்ட நாடுகளின் வரிசையில் கனடா மூன்றாம் இடத்தை வகித்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வட்டி வீத அதிகரிப்பு காரணமாக கனடியர்களின் வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் செலவுகள் அதிகரிப்பும் கடன் பிரச்சினைக்கான பிரதான ஏதுக்களில் ஒன்று எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

செலவு அதிகரிப்பு மற்றும் வட்டி வீத உயர்வு போன்ற ஏதுக்களினால் கனடியர்களினால் சேமிப்பு செய்வதில் சிக்கல்கள் எதிர் நோக்கப்படுகின்றன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் நாள்களில் வட்டி வீதம் மேலும் குறைக்கப்படும் என பல நிதி நிறுவனங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.




# பெண்ணும் இரண்டு சிறுவர்களும் நெடுஞ்சாலை விபத்தில் மரணம்

கனடாவில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கனடாவின் சஸ்கட்ச்வான் மாகாணத்தின் கோசின் பகுதி அதிவேக நெடுஞ்சாலையில் ட்ரக் ஒன்றும் வான் ஒன்றும் மோதிக் கொண்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வானில் பயணம் செய்த சாரதி மற்றும் இரண்டு பயணிகள் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

48 வயதான பெண் ஒருவரும், 5 மற்றும் 6 வயதான இரண்டு சிறுவர்களும் இவ்வாறு விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில் மேலும் இரண்டு பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




# ரொறொன்ரோ மாடிக் குடியிருப்பில் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ரொறொன்ரோவின் கிழக்கு முனையிலுள்ள அடுக்குமாடி கட்டடத்திற்குள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்ட ஒருவர் மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்.

லோகன் அவென்யூவிற்கு மேற்கே உள்ள குயின் ஸ்ட்ரீட் ஈஸ்ட் மற்றும் பூத் அவென்யூவிற்கு அருகில் உள்ள லெஸ்லீவில்லி பகுதியில் இந்த சம்பவம் நடந்தது.

அடுக்குமாடிக் கட்டடத்திற்குள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் பாதிக்கப்பட்ட ஒருவர் தொடர்பாக பிற்பகல் 3 மணிக்குப் பின்னர் தாங்கள் அந்தப் பகுதிக்கு அழைக்கப்பட்டனர் என டொராண்டோ பொலிஸார் தெரிவித்தனர்.

உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் ஒரு நோயாளியை மருத்துவமனைக்கு கொண்டு வந்தனர் என துணை மருத்துவர்கள் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் 30 வயதான ஹிஸ்பானிக் ஆண் (கியூபா, மெக்ஸிக்கோ, போட்டோரிக்கோ, தெற்கு அல்லது மத்திய அமெரிக்கா அல்லது பிற ஸ்பானிஷ் கலாசாரத்தைச் சேர்ந்தவர் )எனப் பொலிஸாரால் வர்ணிக்கப்படுகிறார். அவர் கடைசியாக கருப்பு ஸ்வெட்ஷர்ட் மற்றும் கருப்பு பேண்ட் அணிந்து, இ-பைக்கில் சென்றிருக்கின்றார்.

தகவல் தெரிந்தவர்கள் 416-808-2222 அல்லது க்ரைம் ஸ்டாப்பர்ஸ் என்ற எண்ணில் டொராண்டோ பொலிஸைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.



# கனடாவில் வாடகை தொகை அதிகரிப்பினால் குழந்தை பெறுவதை தாமதப்படுத்தும் இளசுகள்

கனடாவில் வாடகை தொகை அதிகரிப்பு காரணமாக அநேகமானவர்கள் குழந்தை பெற்றுக் கொள்வதை தாமதப்படுத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக 20 முதல் 40 வயதுக்கு உட்பட்டவர்கள் அதிக அளவில் இவ்வாறு குழந்தை பெற்றுக் கொள்வதை தாமதப்படுத்தி வருகின்றனராம்.

18 முதல் 33 வீதமானவர்கள் இவ்வாறு குழந்தை பெற்றுக் கொள்வதை தாமதப்படுத்தி வருகின்றனர்.

அண்மையில் மேற்கொண்ட கருத்து கணிப்பு ஒன்றின் மூலமும் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

அதிகளவான வாடகைத் தொகைக்கு சிறிய வீடுகளில் அல்லது குடியிருப்புகளில் வசித்து வரும் தம்பதியினர் குழந்தை பெற்றுக் கொள்வதற்கு தயக்கம் காண்பித்து வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி நிலைமைகளினால் இவ்வாறு குழந்தை பெற்றுக் கொள்வதற்கு தாங்கள் காலம் தாழ்த்துகின்றனர் எனப் பல இளம் தம்பதியினர் தெரிவித்துள்ளனர்.

கனடாவில் வீடுகளுக்கு காணப்படும் தட்டுப்பாட்டு நிலைமை மற்றும் வீட்டு வாடகை அதிகரிப்பு போன்ற காரணிகளினால் இந்த நிலைமை உருவாகியுள்ளது.

# வெப்ப எச்சரிக்கையை மீறி கால்கேரியில் ஒன்று கூடல் நெரிசலில் மக்கள் வெள்ளம்



சுற்றுச்சூழல் கனடா அமைப்பின் வெப்ப எச்சரிக்கையை மீறி, டவுன் டவுன் கால்கேரியின் ஸ்டாம்பீட் (ஒன்று கூடல் நெரிசல்) பார்க் இந்த வார இறுதியில் ஸ்டெட்சன் (தொப்பி) அணியும் கொண்டாட்டத்திற்கு வந்தவர்களால் நிரம்பியிருந்தது.

161,000க்கும் அதிகமான மக்கள் ஸ்டாம்பீட் தொடக்க நாளுக்காக மைதானத்தில் திரண்டனர். எனினும் 2023 இன் சிறந்த தொடக்க நாள் வருகையான 164,939 உடன் ஒப்பிடுகையில் இது சற்றுக் குறைவு.

முதல் இரண்டு நாள்களில் சுமார் 340,000 பேர் வந்தனர் என ஸ்டாம்பீட்தலைமைநிர்வாகஅதிகாரிஜோயல் கோவ்லி கூறினார். இது கடந்த ஆண்டு சாதனை படைத்த வேகத்தை விட இரண்டாயிரம் பேரின் எண்ணிக்கை குறைவாகும்.

சுற்றுச்சூழல் கனடா வெப்ப எச்சரிக்கைக்கும் மத்தியில் கால்கேரி நகரத்தில் இவ்வளவு பேர் திதண்டுள்ளனர்.

எச்சரிக்கையின்படி, குறைந்தபட்சம் வாரத்தின் நடுப்பகுதி வரை பகல்நேர அதிகபட்ச வெப்பநிலை 30 முதல் 35 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும்.

நிறைய தண்ணீர் குடிப்பது மற்றும் வெளியில் நடக்கும் செயல்பாடுகளை குளிர்ச்சியான நேரங்களுக்கு நகர்த்துவது போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு கால்கேரியர்களை சுற்றுச்சூழல் கனடா கேட்டுக்கொள்கிறது.

கல்கரி குடியிருப்பாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் உடல்நலப் பாதிப்பு உள்ளவர்கள் வெப்ப பக்கவாதத்தின் அறிகுறிகளைக் கண்காணித்துச் செயற்பட ஊக்குவிக்கப்படுகிறார்கள்.





# பழமையான வீட்டை நியான் வண்ணங்களில் பெயிண்ட் பூசி விளம்பரமாக்கியதால் சிக்கல்

100 ஆண்டுகளுக்கும் மேலான பழைய வீட்டின் உரிமையாளர், தமது வீட்டைத் தொலைத்தொடர்பு நிறுவனமான கூடோவின் விளம்பரமாக 100 ஆண்டுகளுக்கும் மேலான பழைய வீட்டின் உரிமையாளர், தொலைத்தொடர்பு நிறுவனமான கூடோவின் விளம்பரமாக நியான் வண்ணங்களில் வண்ணம் தீட்ட அனுமதித்ததன் மூலம் நகர விதிகளை மீறியதாக மாண்ட்ரீல் நகரம் கூறுகிறது.

டொராண்டோவை தளமாகக் கொண்ட ஒரு விளம்பர நிறுவனம் சமீபத்தில் விக்டோரியன் பாணி டூப்ளெக்ஸை ஒரு பெரிய கூடோ விளம்பரமாக மாற்றியது, நிறுவனம் தேர்ந்தெடுத்த சூடான இளஞ்சிவப்பு நிறத்தில், சுண்ணாம்பு பச்சை, ஊதா, டீல் மற்றும் ஆரஞ்சு உச்சரிப்புகளுடன்.

முகப்பில் ”இந்த கூரையின் கீழ் மகிழ்ச்சி இருக்கிறது. கூடோ இணையம்” என்று எழுதப்பட்ட பலகை வியாழன் மதியம் வரை இல்லை.

நகர செய்தித் தொடர்பாளர் சைமன் சாரோன், விளம்பர ஸ்டண்ட் அங்கீகரிக்கப்படவில்லை மற்றும் நகர விதிகளை மீறுகிறது என்றார்.

“பெரும்பான்மையான கட்டிடங்களின் வெளிப்புற முகப்பில் செங்கல் ஓவியம் தீட்டுவதற்கு நகர திட்டமிடல் விதிமுறைகள் தடைசெய்யப்பட்டுள்ளன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்” என்று அவர் எழுத்துப்பூர்வ செய்தியில் கூறினார்.

“பாரம்பரிய கட்டிடங்களில் செய்யப்படும் மாற்றங்களும் கண்டிப்பாக கட்டுப்படுத்தப்படுகின்றன. கூடுதலாக, நகர்ப்புற நிலப்பரப்பில் விளம்பரம் செய்யும் இடத்தை விதிகள் நிர்வகிக்கின்றன.”

நகரம் இன்ஸ்பெக்டர்களை வீட்டிற்கு அனுப்புவதாகவும், உரிமையாளருக்கு மீறல் அறிவிப்பை வெளியிடுவதாகவும் சாரோன் கூறினார்.

இந்த விளம்பரத்திற்குப் பின்னால் உள்ள நிறுவனங்களில் ஒன்றின் செய்தித் தொடர்பாளர் கனடா பிரஸ்ஸிடம், இந்த பிரச்சாரத்தை டொராண்டோவை தளமாகக் கொண்ட கேம்ப் ஜெபர்சன் வழிநடத்தியதாகவும், “சமூகத்திற்கு ஒரு மறக்கமுடியாத மற்றும் மகிழ்ச்சியான அனுபவத்தை உருவாக்க விரும்புவதாகவும் கூறினார்.

”இந்தச் செயல்பாட்டைத் தொடங்குவதற்கு முன், மாண்ட்ரீல் நகரத்தின் பிரதிநிதியால் எங்களுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களையும் வழிமுறைகளையும் நாங்கள் கேட்டுப் பின்பற்றினோம்,” என்று பிரச்சாரத்தில் ஒத்துழைத்த பிளஸ் நிறுவனத்தின் இசபெல் போனின் எழுதினார். வண்ணம் தீட்ட அனுமதித்ததன் மூலம் நகர விதிகளை மீறியுள்ளார் என மொண்ட்ரீல் நகர நிர்வாகம் கூறுகிறது.